Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
SESSIONS CASE NO.89**/2022**

Deposition of PW5 Witness for Defence

Defence Court

Name :S.Vinoth Calling :

Father's Name :Selvraj Village :

Age : Taluk :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 03th day of December 2024.

**(A1 to A3 are present.)**

**(**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**.)**

குறுக்கு விசாரணை

நான் பூந்தமல்லியை அடுத்த புதுசத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். என்னுடன் கையெழுத்திட்ட ராமு எனது நண்பர். 13.12.2020 அன்று காலை 06.30 மணியளவில் புதுசத்திரம் பேருந்து நிறுத்தம் அருகே டீ சாப்பிட சென்றோம். டீ சாப்பிடுவதற்கு மட்டும் தான் நான் அங்கு சென்றேன். இல்லையேல் அங்கு செல்வதற்கான வாய்ப்பு இல்லை. ராமு எனது வீட்டிற்கு பக்கத்துவிட்டில் குடியிருக்கிறார். நான் மணல் லாரி டிரைவராக இருந்து வருகிறேன். ராமு India Japan lighting limited நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். சம்பவ இடத்தில் அப்போது சுமார் 30 பேர் இருந்தார்கள். நான் டீ சாப்பிடுவதற்கு முன்னரே சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு எவ்வளவு நேரத்திற்கு முன்பு போலீசார் அங்கு விசாரித்து கொண்டிருந்தார்கள் என்பது குறித்து நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. 30 பேர் இருக்கும் சூழ்நிலையில் என்னையும் ராமுவையும் மட்டும் ஏன் அழைக்கிறீர்கள் என்று போலீசாரிடம் கேட்ட போது அவர்கள் எங்களை சாட்சிகளாக இருக்க கேட்டார்கள் அதன் பேரில் நாங்கள் சாட்சிகளாக இருந்தோம். எங்கள் முன்னிலையில் இரத்தம் படிந்த மண், இரத்தம் படாத மண் ஆகியவற்றை போலீசார் தார் ரோட்டிலிருந்து சுரண்டி

சேகரித்தார்கள். எதை வைத்து எடுத்தார்கள் என்பதை நான் கவனிக்கவில்லை. எந்த போலீசார் எடுத்தார்கள் என்றால் போலீசார் எடுத்தார்கள் அவர்களின் பதவியின் பெயர் எனக்கு தெரியவில்லை. அ.த.சா.2 ஐ சம்பவ இடத்தில் பேருந்து நிறுத்தம் அருகே எங்கள் முன்னிலையில் போலீசார் எழுதினார்கள். போலீசாரிடம் நான் எனது வீட்டு விலாசத்தை கொடுத்தேனா என்றால் இல்லை. கையெழுத்து போட்ட பின்னர் போலீசார் என்னை விசாரித்து விலாசம் கேட்டார்கள். போலீசார் என்னை என்றைக்கு விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. அ.த,சா.2 ல் எனது கையெழுத்தின் கீழே விலாசம் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்லியுள்ள நேரத்தில், இடத்தில், விதத்தில் அ.த,சா.2 தயாரிக்கப்படவில்லை என்றும் அதன் அடிப்படையில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் நான் திருட்டு மணல் அடித்து வருகிறேன் என்றும் காவல் நிலையத்தில் என்மீது பல வழக்குகள் உள்ளது என்றும் ஆதலால் நான் போலீசாருக்கு பவ்வியப்பட்டு உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.